கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/ இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமானித் தேர்வு

2013/2014 (June/July 2015)

# EC 1212 - FUNDAMENTALS OF MACRO ECONOMICS

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் வினா உட்பட ஏனைய வினாக்களில் இரு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

01. (அ) பேரினப்பொருளாதாரம் ஒன்றின் குறிக்கோள்களை அடையாளப்படுத்துக.

(08 புள்ளிகள்)

(ஆ) பொருளாதாரம் ஒன்றிற்குரிய பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

$C = 20+0.8Yd$

$I$ = ரூபா 50 மில்லியன்

G= ரூபா 20 மில்லியன்

$Yd = Y-Tn$, $Tn = \bar{T}x - \bar{T}r$

$Tr = 0$

$Tx$ = ரூபா 10 மில்லியன்

C = நுகர்வு

G = அரசாங்க செலவீடு

I = முதலீடு

Yd = செலவிடத்தக்க வருமானம்

Tn = தேறிய வரி வருமானம்

$\bar{T}x$ = வரிகள்

$\bar{T}r$ = மாற்றல்கள்

(i) சமநிலைத்தேசிய வருமானத்தைக் கணிக்குக?

(08 புள்ளிகள்)

(ii) சமநிலை வருமானத்தில் நுகர்வையும், சேமிப்பையும் காண்க?

(04 புள்ளிகள்)

(iii) சமநிலையில் உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சலுக்கு சமனானது என்பதனை நிறுவுக.

(04 புள்ளிகள்)

(இ) தேசிய வருமானக் கணிப்பீட்டில் காணப்படும் குறைபாடுகளை அடையாளப்படுத்துக.

(07 புள்ளிகள்)

(ஈ) பேரினப் பொருளாதார குறிக்கோளை அடைய எத்தணிக்கின்ற போது சில இலக்குகள் தவறவிடப்படுகின்றது விளக்குக?

(09 புள்ளிகள்)

02. (அ) "வணிக வங்கிகள் இரண்டு முரண்பட்ட இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படுகின்றன". உதாரணங்களைக் கையாண்டு விளக்குக.

(09 புள்ளிகள்)

(ஆ) வணிக வங்கி ஒன்றின் கடனாக்கத் தொழிற்பாட்டினை விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) மத்திய வங்கி ஒன்றின் நாணயக்கொள்கை கருவிகளின் பிரயோகங்களை ஆராய்க?

(12 புள்ளிகள்)

03. (அ) பணவீக்கம் ஒன்றின் பொருளாதார விளைவுகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பிலிப்ஸ் வளையியை (Philips Curve) வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) கேள்வித்தூண்டல் மற்றும் செலவுத்தூண்டல் பணவீக்கங்களை வேறுபடுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

04. (அ) சென்மதி நிலுவை ஒன்றின் பிரதான உள்ளடக்கங்களை விளக்குக.

(09 புள்ளிகள்)

(ஆ) நாணயமாற்று வீத முறைகளை சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) இலங்கையில் சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டு வந்த நாணயமாற்று வீத முறைகளின் பலம் மற்றும் பலவீனங்களை ஆராய்க?

(12 புள்ளிகள்)

05. சுதந்திரத்திற்குப் பின்னர் பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டினை அடைவதில் இலங்கையானது எதிர் நோக்கிவருகின்ற சவால்களை பேரினப் பொருளாதார மாறிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

(30 புள்ளிகள்)